Registerd as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

Chunnakuli Branch Library

Y.M.C.A

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 5 [19-06-93] சனிக்கிழமை ஓசை 121

## குடும்ப அட்டை மோசடி; தவிர்க்குமாறு கோரிக்கை

குடும்பப்பதிவு அட்டைகளிலும் வடபகுதிக்கு வெளியேசெல்வதற்கான பயண அனுமதி அட்டைகளிலும் மோசடியில் ஈடுபட்ட பலர் அண்மைக்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து பின்வரும் விடயங்கள் பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. குடும்பப்பதிவு அட்டைகளிலும்,வடபகுதிக்குவெளியே செல்வதற்கான பயண அனுமதி அட்டைகளிலும், மோசடிகள் செய்த பலர் அண்மைக்காலத்தில்கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்து. இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு அதனால் ஏற்படும் வீண் அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். வட பகுதிக்கு வெளியேசெல்வதற்கான அனுமதி அட்டைகளில்போக்கு வரத்துக் கண்காணிப்புப் பிரிவினரே எழுத உரித்துடையவர்கள். அதேபோல் குடும்பப்பதிவு அட்டையிலும், பிணை விபரங்களிலும் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினரும் மாற்றம் சம்

(3ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் ஆணைபெற்ற தூதராக

# பிரிகேடியர் வீரசேகரா இன்று யாழ். வருகிறார்





## புலிகளுடன் இன்று காலை அவசரப் பேச்சுவார்த்தை

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் ஆணைபெற்ற தூதுவராக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார். இவர், தற்பொழுது புலிகளின் காவலிலுள்ள 39 சிறிலங்கா போர்க்கைதிகள் குறித்து புலிகளுடன் அவசரப் பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளார்.

சிறிலங்கா ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் அவரது ஆணைபெற்ற தூதுவராக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார். இவர் நேற்று மாலை கொழும்பில் இருந்து பலாலிக்கு விமானம் மூலம் வந்து சேர்ந்துள்ளார்.

காலை 7-30 மணியளவில் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் சேவையில் ஈடுபட்டுள்ள குமண கப்பலின் மூலம் பருத்தித்துறை துறைமுகத்தைவந்தடைவார் எனத் தெரியவருகின்றது

அங்கிருந்து வாகனம் மூலம் யாழ்ப்பாணம் வரும் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா, நண்பகலுக்கிடையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார் எனவும் தெரிய வருகின்றது.

இதே சமயம் யாழ். வரும் பிரிகேடியருடன் யாழ். அரச அதிபர் மாணிக்கவாசகரும் உடன்வருவார் எனவும் தெரிய வருகின்றது.

## ஐரோப்பாவில் புலிகளை சந்திக்கப் போவதில்லை

பாரிசில் ரணில் தெரிவிப்பு


(லண்டன்)

விடுதலைப் புலிகளோடு பேச்சுநடத்தும்சந்தர்ப்பத்தை அரசு எப்போதுமே நிராகரித்தது இல்லை. இருப்பினும் தற்போது தாம் பாரிசில் தங்கியிருக்கும் போது விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய பிரதிநிதியை கட்டாயம் சந்திக்கப் போவதில்லை என சிறிலங்கா பிரதமர் பி. பி. ஸிக்கு வழங்

( 03 ஆம் பக்கம் பார்க்க )

# துயர் தோய்ந்த முகங்களுடன் உறவினர் வந்தடைந்தனர்





தற்போது சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ள யுத்தக் கைதிகளை நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ள அவர்களது உறவினர்கள் சந்தித்த போது கதறியழும் காட்சியை மேலுள்ள படங்களில்; காணலாம்.

# பெரியபண்டிவிரிச்சானில் 3 தடவைகள் குண்டு வீச்சு

## கோவில் சேதம்; பங்குத்தந்தை காயம்

(மன்னார்)

மன்னார் பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் நேற்றுமுன்தினம் சிறிலங்கா விமானப் படையினரின் குண்டு வீச்சுத் தாக்குதலில் தேவாலய பங்குத்தந்தை காயமுற்றதுடன் கோவிலும் சேதமடைந்தது.

காலை 9.45 மணியளவில் பெரியபண்டிவிரிச்சான் காட்டுப் பகுதிக்கு வந்த இரு புக்காரா விமானங்கள் ஆறு குண்டுகளை வீசின.

பின்னர் நண்பகல் 12.15மணியளவில் அப்பகுதிக்கு மீண்டும் வந்த புக்காரா விமானங்கள் நான்கு குண்டுகளை வீசின.

மேலும் பரப்புக்கடந்தான் காட்டுப் பகுதிக்குள் இதே தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இரு குண்டு வீச்சு விமானங்கள் நான்கு குண்டுகளை வீசின.

மேலும் மாலை 4.30 மணியளவில் பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் இரண்டு பொம்பர்கள் நான்கு குண்டுகளை வீசின. இக் குண்டு வீச்சு தாக்குதலுக்கு கோவில் சேதமடைந்ததுடன் தேவாலய பங்குத்தந்தை பெனடிற் காயமுற்றார்.

## மன்னார் மாவட்டத்தில் தாக்குதல்கள் ஆரம்பம்

### இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று அதிகாலை ஆரம்பிக்கப்பட்ட இந் நடவடிக்கையின் நோக்கம், நானாட்டான் பகுதிக்கும் சிலாபத்துறை பகுதிக்கும் இடையேயுள்ள புலிகளின் தளங்களை நிர்மூலமாக்குவதாகும் என்று இராணுவ அதிகாரி ஒருவர் லங்காபுவத்திற்கு கூறியுள்ளார்.

இதேவேளை அருவி ஆறுக்கு சமீபமாக விடுதலைப் புலிகள் குழு ஒன்றிற்கும் இராணுவத்தினருக்கும் இடையே மோதல் நடந்ததாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

சிறிலங்கா ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் அவரது ஆணைபெற்ற தூதுவராக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார். இவர் நேற்று மாலை கொழும்பில் இருந்து பலாலிக்கு விமானம் மூலம் வந்து சேர்ந்துள்ளார்.

காலை 7-30 மணியளவில் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் சேவையில் ஈடுபட்டுள்ள குமண கப்பலின் மூலம் பருத்தித்துறை துறைமுகத்தைவந்தடைவார் எனத் தெரியவருகின்றது

அங்கிருந்து வாகனம் மூலம் யாழ்ப்பாணம் வரும் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா, நண்பகலுக்கிடையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார் எனவும் தெரியவருகின்றது.

இதே சமயம் யாழ். வரும் பிரிகேடியருடன் யாழ். அரச அதிபர் மாணிக்கவாசகரும் உடன்வருவார் எனவும் தெரியவருகின்றது.

## ஐரோப்பாவில் புலிகளை சந்திக்கப் போவதில்லை

### பாரிசில் ரணில் தெரிவிப்பு

(லண்டன்)

விடுதலைப் புலிகளோடு பேச்சுநடத்தும்சந்தர்ப்பத்தை அரசு எப்போதுமே நிராகரித்தது இல்லை. இருப்பினும் தற்போது தாம் பாரிசில் தங்கியிருக்கும் போது விடுதலைப் புலிகளின் ஐரோப்பிய பிரதிநிதியை கட்டாயம் சந்திக்கப் போவதில்லை என சிறிலங்கா பிரதமர் பி. பி. ஸிக்கு வழங்

( 03 ஆம் பக்கம் பார்க்க )

# துயர் தோய்ந்த முகங்களுடன் உறவினர் வந்தடைந்தனர்

(க- கணேசலிங்கம்)

யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட சிங்கள யுத்தக் கைதிகளின் உறவினர்கள் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தினூடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

துயரம் தோய்ந்த முகத்துடனும், ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள் போன்ற உணர்வுகளையும் சுமந்து வந்த இச் சிங்களக் கைதிகளின் உறவினர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து வரவேற்றனர்.

இவ் உறவினர்களின் நெஞ்சங்களில் குடியிருந்த அச்சமும், பீதியும் விடுதலைப் புலிகளின் வரவேற்பைத் தொடர்ந்து அகன்று விட்டதை அவர்களது முகங்கள் ஒவ்வொன்றும் பறைசாற்றிக் கொண்டிருந்தன. நேற்று முன்தினம் காலை 6-00 மணியளவில் கைதிகளின் உறவினர்கள் குழு ஒன்று திருக்கோணமலையை நோக்கிப் புறப்பட்டது இதைவிட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கைதிகளது உறவினர்கள் சிலரும் இவர்களுடன் இணைந்துகொண்டனர்நேற்று முன்தினம்மாலை 6-00 மணியளவில் திருக்கோணமலை, துறைமுகத்தில் தரித்துநின்ற ''நரோமா'' என்ற கப்பலில் இவர்கள் ஏறிக்கொண்டதும் யாழ்ப்பாணத்துக்கான இவர்களது பயணம் ஆரம்பமாகியது.

இருள் சூழ்ந்த கடற்பரப்பினூடாக பல மணி நேரம் பயணத்தை தொடர்ந்த இக் கப்பல் நேற்று அதிகாலை 6.00 மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்தை அடைந்தது.

கப்பல் துறைமுகத்தை அடைந்தாலும் சில ஏற்பாடுகள் காரணமாக இவர்கள் தரையிறங்க சற்று தாமதம் ஏற்பட்டது. இதனால் கப்பலின் உட்புறம்தங்கியிருந்த கைதிகளின் உறவினர்கள் கப்பலின் மேற்தளத்திற்கு வந்து பருத்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### கிளாலி பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ்மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### திங்கள் தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இம்முறை ''குமண'' கப்பலில் எடுத்து வரப்பட்ட 300 தபால் பொதிகளும்எதிர்வரும் திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்படவுள்ளதாக.யாழ் பிரதான தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கப்பலில் இருந்து இன்று தபால்பொதிகள் இறக்கப்பட்டு பருத்தித்துறையில் இருந்து யாழ். பிரதான தபாலகம் கொண்டு வரப்படவுள்ளன. இவை நாளை தரம்பிரிக்கப்பட்டு நாளை மறுதினமே சகல இடங்களிற்கும் விநியோகிக்கப் படவுள்ளதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

[பா], [சி]

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள

# யுத்தக் கைதிகளை சந்தித்த 4 உறவினர்கள் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரதம் இருந்து வரும் யுத்தக் கைதிகளை பார்க்கச் சென்ற அவர்களதுஉறவினர்களும் கைதிகளும் சந்தித்த போது இரு சாராரும் கண்ணீர் மல்க கதறி அழுதனர். அச் சமயத்தில் வந்திருந்த உறவினர்களில் நால்வர் மயங்கி விழுந்தனர்.

அதன் பின்னர் உறவினர்களும், யுத்தக் கைதிகளும் தத்தம் குடும்ப விபரங்கள் பற்றிய தகவல்களைக் கலந்துரையாடியதுடன், உறவினர்களால் எடுத்துவரப்பட்ட புகைப் படங்களும் யுத்தக் கைதிகளுக்கு காண்பிக்கப்பட்டன.

# தமிழரை வழிநடத்த விடுதலைப்புலிகள்உள்ளனர்

(நமது நிருபர்)

''எங்களுக்கு உதவுவதற்கு அரசியல்வாதிகளோ,மதபீடங்களோ தயாராக இல்லை. ஆனால் தமிழ் மக்களாகிய உங்களுக்காக செயல்படவோ, வழிநடத்தவோ விடுதலைப் புலிகள் இருக்கின்றனர்.''

''தென்னிலங்கையில் மக்கள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்தக் கூடிய சூழ்நிலை இன்று இல்லை. அவ்வாறு போராட்டம் நடத்த முற்பட்டால் எமதுஉயிர்களுக்கு மட்டுமல்ல எம்முடன் கூட இயங்கு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## உங்கள் பிள்ளைகள் மீது அரசுக்கு அக்கறையில்லை

### இளம்பரிதி தெரிவிப்பு

''உங்களுடைய பிள்ளைகளையும் - உங்களுடைய உறவினர்களையும் விடுதலை செய்வதற்கு அரசாங்கத்தினால் எதுவித முயற்சியும் எடுக்கப்படாமையையிட்டு நாம் மிகவும் மனவருத்தம் அடைகின்றோம். எங்களுடைய நிபந்தனைக்கு அமைய

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து, பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6849)

### விற்பனை முகவர் தேவை

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் துவிச்சக்கரவண்டியில் சோடா, ஜாம் என்பன கமிசன் அடிப்படையில் விற்பனை செய்யக்கூடியவர்கள் தேவைப்படுகின்றனர். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: உணவு பதனிடல்பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், முதன்மைச் செயலகம், தாவடி. (சி-6862)

### தேவை

ஸ்ருடியோ வேலைகள் பழகிய - பழக விரும்பும் பெண்பாலார் (அண்மையிலுள்ளோர்) விண்ணப்பிக்கவும் ஸ்ருடியோ நித்ய சித்ரா - சங்கானை. (5181)

### மண்ணெண்ணெய் விநியோகம்

[தொல்புரம்]

வலிமேற்கு சங்கானைஉதவி அரசாங்க அதிபர் பிரிவில் சிறுதானியப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு குறைந்தவிலையில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது.

பயறு, கௌபி, குரக்கன் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பயறு, கௌபி விதைத்தவுடன் 5 பரப் ளவு காணிக்கு ஆரம்பக் கட்டமாக 3½லீட்டர் எண்ணெயும் பின்னர் ஒரு தடவைக்கு 2½லீட்டர் வீதம மொத்தம் 12 தடவைகள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றது. [41]

### மரக்கறி திருட்டு

[மல்லாகம்]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



30-06-92 அன்று கட்டைக்காடு, புல்லாவெளியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடிமோதலில் வீரச்சாவெய்திய

கடற்புலி 2-ம் லெப்.

**காளிதாஸ்**

(கமலநாதன் விக்கினேஸ்வரன்)

| தாயின் மடியில்: | தாயக மண்ணில்: |
|---|---|
| 19.08.1975 | 30.06.1992 |

திதி:
19.06.1993

களை சிந்தும் புன்னகையைக் காணவோ வழியில்லை
மதுரக்குரல் பேச்சுக் கேட்கவோ வழியில்லை
தனித்து நீ ஒருவனே என் வயிற்றில் மலர்ந்தாய்
தாலாட்ட நீ ஒருவனே கிடைத்தாய்
பாலூட்டி, பால் சோறிட்டு, பக்குவமாய்
அக்கமதில் வைத்திருந்தேன் — நாளை நீயே
எனக்கு நிழல் என்றிருந்தேன்.
மண் காக்கப்போன நீ எனை மறப்பாய் என்றெண்ணவில்லை
தனிமரமாய் நான் இருக்கிறேன்
தளிர் ஓலைதான் இடுங்குகிறேன்
இனி எங்கே வரப்போகிறாய் செல்வமே
பார் காக்கப் பறந்திட்டாய் பாலனே
பாதியில் உனை இழந்திட்டேன் ஆனாலும்
இது நான் செய் தவமே.

உன் அன்புத்தாய்
கொழும்புத்துறை யோகேஸ்வரி

(5176)

## 2-ம் வருட நினைவு நாள்



## உடன் தேவை

விரையுங்கள்:

நல்ல விலைக்கு வாங்கப்படும்

உங்களின் பழைய மெத்தைகள், குசன் துண்டுகள் குசன் வகை சகல அளவுகளிலும்) உடன் பணத்திற்குக் கொள்முதல் செய்யப்படும். நேரிலும் வந்து வாங்கப்படும்.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
இல. 166, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(வேமபடி மகளிர் பாடசாலை முன்பாக) (5170)

## கேள்வி அறிவித்தல்
## யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

பேக்கரி தொழிலாளர்களுக்கு மேல் அங்கி(ஏப்ரன்), தொப்பி தைத்தல்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க அங்கத்தவர்களின் பேக்கரிகளில் வேலை செய்யும் சகல தொழிலாளர்களுக்கும் தேவையான ஐந்நூறு மேலங்கி, தொப்பி தைத்து வழங்குவதற்கு, கேள்விகள் தையல்காரர்களிடமிருந்து, 24-07-93 திகதி காலை 10 மணிவரை, மாவட்ட தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மாதிரி மேலங்கியும், அதன் அளவுகளும் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் மேல் இடது மூலையில் மேல் அங்கிகள் எனக் குறிப்பிட வேண்டும்.

மாவட்ட செயலாளர்
(5162) யாழ். மா. பே. உ. சங்கம்

## 5-வது மாத நினைவஞ்சலி



வீரப்பிறப்பு
29-6-1973

வீரச்சாவு
19-01-1993

வீரவேங்கை

**இளவேனில் / துஷான்**

(தில்லையம்பலம் ரவி)

விரைந்து வந்த தென்றல் அவன் நாமம் கூற
ஓடிய அருவி அவனைத் தேட
வளர்ந்த தரு வாடி நிற்க
தவழ்ந்த மண் விடை தந்தோ

துவண்ட மக்கள் துயர் துடைக்க
துஷான் எனும் நாமத்துடன் வேங்கை அணிதனில்
காட்சியை அவதானிக்கும் திறம் கொண்டவன்

## நினைவு கூருகின்றோம் ... 1993-06-19

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக்கடற்பரப்பில்-மன்னார்-நாச்சிக்குடா அன்னைமேரி படகில் பயணம் செய்து கொண்டிருந்தபோது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 32 தமிழர்கள்.

யாழ்-வசாவிளான் தோலகட்டி ஆச்சிரமத்தினுள் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கிறிஸ்தவமதகுரு

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய,

**கிளாஸ்றிக்கோ** [சாமித்தம்பி இந்திரகுமார்-கும்புறுமூலை-மட்டு]

1988ஆம் ஆண்டு அம்பாறை-பாண்டிருப்புப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய,

**லெப்.சுந்தர்** (சின்னத்தம்பி சிவானந்தசிங்கம்-காரைதீவு 03-அம்பாறை)

1989ஆம் ஆண்டு திருமலை-மூதூர் எல்.பி.2 பகுதியில் இந்தியப்படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப் புவிராஜ்** (வே.கிருஷ்ணகுமார்-கங்குவேலி, மூதூர் - திருமலை)

யாழ்-திருநெல்வேலியில் இந்தியப்படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**கண்ணாடி/பேபி** (சண்முகம் உதயவர்மன்-''உமாவாசம்'' புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு)

**சண்** (நடராசா சண்முகநாதன்-காட்டுப்புலானை, கோப்பாய் வடக்கு-யாழ்)

பருத்தித்துறையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வயோதிபர்.

சேசவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர்,

**தங்கவேலாயுதம்** (... ... தாளையடி வீதி, - மயிலிட்டி)

1990ஆம் ஆண்டு அம்பாறை-பொத்துவில் கொட்டுகலப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**குயிலி** (... ... அம்பாறை)

**வீரமணி** (ச. இராஜேந்திரன்-இரான்:மட்டு)

**அசோகன்** (... ... ... ஆரையம்பதி-மட்டு)

**காளிதாஸ்** (... ... ... பெரியபுல்லுமலை-மட்டு)

**நெல்சன்** (... ... ... மட்டுநகர்)

**வின்சன்** [... ... ... ஏறாவூர்-மட்டு]

**ஜின்னா** [லெப்பைத்தம்பி செய்னூர்-ஓட்டமாவடி, வசழைச்சேனை-மட்டு]

திருமலை-மூதூர் எல். பி. 03 பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.சத்தியன்** [அருளம்பலம் பேரின்பராசா-எல்.பி. 03.மூதூர்-திருமலை]

யாழ் - கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய் ய-

**லெப். பூபதி** (குமாரசிங்கம் குமாரசங்கர் - கந்தளாய்-திருமலை)

**கப்டன் சேரன்** (கந்தையா சேனாதிராஜா - ஒதியமலை - மணலாறு)

**கப்டன் அந்தோனி** (ஜேக்கப் சத்தியசீலன் - எமில்நகர் - மன்னார்)

**லெப். வக்கீல்** (செல்லையா உருத்திரதாஸ் - இல 6/1, மீனாட்சியம்மன் வீதி, கொட்டடி - யாழ்)

**சுருளி** (கந்தையா நந்தபாலன் - இல 56, குடியேற்றத் திட்டம், திருநெல்வேலி - யாழ்.)

**சதீஸ்** (உமாபதி சதீஸ்குமார் - 315, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்)

யாழ் - கோட்டையில் சிறிலங்கா விமானப்படையின

## மண்ணெண்ணெய் விநியோகம்

[தொல்புரம்]

வலிமேற்கு சங்கானைஉதவி அரசாங்க அதிபர் பிரிவில் சிறுதானியப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு குறைந்தவிலையில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது.

பயறு, கௌபி, குரக்கன் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பயறு, கௌபி விதைத்தவுடன் 5 பரப் அளவு காணிக்கு ஆரம்பக் கட்டமாக 3½லீட்டர் எண்ணெயும் பின்னர் ஒரு தடவைக்கு 2½லீட்டர் வீதம மொத்தம் 12 தடவைகள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றது. [41]

## மரக்கறி திருட்டு

[மல்லாகம்]

இணுவில், உடுவில் பகுதிகளில் உள்ள தோட்டங்களிலிருந்து பெருவாரியான மரக்கறிகள் இரவு வேளைகளில் திருடப்பட்டு வருவதாக அவ்வூர் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மண்ணெண்ணெய் விலையேற்றத்தின் மத்தியிலும் இவ்விதம் இழப்புக்கள் ஏற்படுவது தமக்கு மிகுந்த நட்டத்தைதருவதாக இவர்கள் மேலும் தெரிவிககின்றனர். [9]

## விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்புகள்

யாழ் மாவட்டத்திலே கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக வட்டவை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கான விவசாய பயிற்சி வகுப்பொன்று கடந்த 24.04.93 தொடக்கம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் திருநெல்வேலி விவசாய பயிற்சிப் பாடசாலையில் நடாத்தப்பட்டு வந்தது.

பயிற்சி வகுப்பு தொடர்ந்து பதினொரு நாட்கள் நடைபெற்று பயிற்சியை முடித்துக் கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 9-ம் திகதி பயிற்சிப் பாடசாலை அதிபர் திருமதி கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

ம வட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. சின்னத்துரை, பொருண்மிய மேம்பாட்டுக்கழக யாழ். மாவட்ட இணைப்பாளர், கிராமிய உற்பத்திக் குழு பகுதி பொது முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பயிற்சி வகுப்பில் தாம் பெற்ற அறிவினை சுயசார்புப் பொருண்மியத்தை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தும்படி பயிற்சியாளர்களை பொருண்மிய மேம்பாட்டுக் கழக யாழ் மாவட்ட இணைப்பாளர் கேட்டுக் கொண்டார்.

---

கொழும்புத்துறை

உன் அன்புத்தாய்
யோகேஸ்வரி

(5176)

---

# 2-ம் வருட நினைவு நாள்



## கப்டன் லீமா

(செல்வி இராசேந்திரம் கௌரி)

தாயின் மடியில்
16-09-1971

தமிழின் விடிவிற்காய்
11-07-1991

திதி: 19-06-1993

அவனிதனில் தமிழ்த்தாயின் அல்லல் கண்டு
ஆனையிறவு முகாம் நோக்கி நேரில் சென்று
இங்குள்ள சிங்களவன் அகதியென்று - இது
ஈனர்களின் அகதிமுகாம் எனப்பகன்று
உலகமெலாம் உயர்வாக உற்று நோக்க
ஊரெல்லாம் ஒன்றாகி உரத்தைச்சேர்க்க
எங்கள் தமிழீழ மண்ணை எரிக்க நிற்கும்
ஏவல்காரர் கூட்டமதை சாய்க்க எண்ணி
ஐயமதை முற்றாக தள்ளி வைத்து
ஒரு தலைவன் பிரபாவின் வழியிற் சென்று
ஓங்கார ரூபமதைக் காட்டி நின்ற
ஔடதமாம் அணைந்து விட்டாள் எங்கள் லீமா
அஃறிணையாம் அரக்கரவர் அறிகிலாரோ.

இன்று 19-06-1993 எமது இல்லத்தில் நடைபெறும் ஈராண்டுத் திதியில் கலந்து கொள்ளுமாறு நண்பர்கள், சகபோராளிகள், உறவினர்கள் மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''கௌரிவீதி''
துன்னாலை வடக்கு
கரவெட்டி
இந்திரம்மன் கோவிலடி.

பிரிவின் துயராற்றா
பெற்றோர், தங்கை, தம்பிமார்,
மாமா, உற்றார், உறவினர்

(5147)

---



வீரச்சாவு

19-01-1993

வீரவேங்கை

## இளவேனில் / துஷான்

(தில்லையம்பலம் ரவி)

விரைந்து வந்த தென்றல் அவன் நாமம் கூற
ஓடிய அருவி அவனைத் தேட
வளர்ந்த தரு வாடி நிற்க
தவழ்ந்த மண் விடை தந்தோ

துவண்ட மக்கள் துயர்துடைக்க
துஷா'ன் எனும் நாமத்துடன் வேங்கை அணிதனில்
காட்சியை அவதானிக்கும் திறம் கொண்டவன்
இவன் ரசனை புகைப்படத்துறையினிலே
சிறந்தவன் ஆக்கியது.


எதிரியவன் பாசறை தேடியே
புல்மோட்டை சென்றவன் சென்ற கணத்தினிலே
நெஞ்சினிலே குண்டை சுமந்தவன்
மறதமிழர் மானம் காக்க
மானம் காத்த மறவா மாவீரர் இவர்
உன் இன்பமான வாழ்வை
மறந்திடுமா எம் இதயம்

- நண்பர்கள்.

(5155)

---

# 4-ம் ஆண்டு நினைவலைகள்



செல்வன்

## சண்முகம் உதயவர்மன்

(பேபி)

(மு/புதுக்குடியிருப்பு உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவன்)

அன்னையின் மடியில்
27-02-1972

அன்னியன் பிடியில்
19-06-1989

''உன் நினைவலைகள் வந்திடும் வேளையில்
எம் கருவிழிகளில் கண்ணீர் கசிந்திடும்
எம் இதயங்களில் உன் ராகம் பாடிட
எம் உணர்வுகள் தானின்று மறந்து நிற்கின்றன''

அப்பா, அம்மா, அண்ணாமார்.

''உமா வாசம்''
புதுக்குடியிருப்பு.

(5178)

73, பலாலி வீதி,
கந்தர்மடம்.

---

[... ... ... ஏறாவூர்-மட்டு]

ஜின்னா [லெப்பைத்தம்பி செய்னூர்-ஓட்டமாவடி, வாழைச்சேனை-மட்டு]

திருமலை-மூதூர் எல். பி. 03 பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

2-ம் லெப். சத்தியன் [அருளம்பலம் பேரின்பராசா-எல். பி. 03. மூதூர்-திருமலை]

யாழ் - கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

லெப். பூபதி (குமாரசிங்கம் குமாரசங்கர் - கந்தளாய்-திருமலை)

கப்டன் சேரன் (கந்தையா சேனாதிராஜா - ஒதியமலை - மணலாறு)

கப்டன் அந்தோனி (ஜேக்கப் சத்தியசீலன் - எமில்நகர் - மன்னார்)

லெப். வக்கீல் (செல்லையா உருத்திரதாஸ் - இல 6/1, மீனாட்சியம்மன் வீதி, கொட்டடி - யாழ்)

சுருளி (கந்தையா நந்தபாலன் - இல 56, குடியேற்றத் திட்டம், திருநெல்வேலி - யாழ். )

சதீஸ் (உமாபதி சதீஸ்குமார் - 315, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்)

யாழ் - கோட்டையில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய-

கும்பன் (இராமச்சந்திரன் விக்கினேசா - பறளாய் வீதி, சுழிபுரம்)

அம்பாறையில் முஸ்லிம் காடையர்களினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட பொத்துவிலைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

அம்பாறை - கல்முனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது காணாமல் போன மட்டு - மருத்துவமனை வீதியைச் சேர்ந்த தமிழிளைஞன் மற்றும் மட்டுநகரில் சிறிலங்கா விமானப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன் சுங்கன்கேணிப் பகுதியில் உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

யாழ் - ஏழாலையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட அதே பகுதியைச் சேர்ந்த தமிழ்ச்சிறுவன்.

1991ஆம் ஆண்டு வவுனியா - நேரியாமோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய-

வினோத் (பா. ரவீந்திரன் - 5-ம்குறிச்சி, ஏறாவூர்-மட்டு)

குமார் ( - பரமநாதன் - 1-ம் வட்டாரம், கடற்கரைச் சேனை, மூதூர் - திருமலை)

கப்டன் விஜி (கந்தையா கனகசபாபதி - சாமிப்புலம், நல்லூர் - பூநகரி)

லெப். சின்னச்சுதா/பாப்பி (வைத்திலிங்கம் பரமலிங்கம்- நாச்சிமார் கோவிலடி, அராலி தெற்கு - யாழ்)

2-ம் லெப். கண்ணையா (வேலாயுதம் சிவகுமார்- நீர்வேலி - யாழ். )

பசிலோன்/கபிலோன் (நவரத்தினம் உதயகிருஷ்ணன் - காளையடி, பண்டத்தரிப்பு- யாழ்)

பாரதி (சதாசிவம் திவாகரன் - பலகாடு, காரைநகர்-யாழ்)

ஆனந்தகுமார் [சங்கர் சுப்பிரமணியஐயர் ஆனந்தராஜ்- மடத்தடி ஒழுங்கை, மானிப்பாய் தெற்கு, யாழ்]

பாரி [இராசரத்தினம் வித்தியானந்தன் - நீர்வேலி தெற்கு- யாழ்]

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய-

மயூரன் [பரமதாஸ் மில்ரன் - சங்கானை மேற்கு-யாழ்]

நாதன் [சிவலிங்கம் உதயகுமார் - தாழையடி, மருதங்கேணி - யாழ்]

மட்டு - மண்டூரில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6861)

சிந்தனைக்கு

தன் அருகதைக்கு ஏற்ற அரசாங்கமே ஒவ்வொரு நாட்டுக்கும் கிட்டுகிறது.

- ஜோசப் டி மேஸ்த்ரே

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## 'நிழல் ராஜாக்களும்' இந்திய அரசியலும்

இந்திய பொருளாதாரத்தையே கடந்தவருடம் ஓர் உலுப்பு உலுக்கிய பங்குச்சந்தை தரகரான ஹர்ஷத் மேத்தா, மூன்று தினங்களுக்கு முன் வெளியிட்ட அறிவிப்பானது பிரதமர் நரசிம்மராவின் ஆட்சியையே ஓர் உலுக்கு உலுக்கியதெனலாம்.

கடந்த புதன்கிழமை பம்பாயில், தாஜ் ஹோட்டலில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த ஹர்ஷத் மேத்தா, பிரதமர் நரசிம்மராவிற்கு தேர்தல் செலவிற்கென 1991ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாவை லஞ்சமாக வழங்கியதாக அறிவித்தார். ஹர்ஷத் மேத்தாவின் வழக்கறிஞரோ அதற்கும் மேலே ஒரு படிசென்று இதனைப் பிரதமர் நரசிம்மராவ் மறுப்பாரேயானால், இதனை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் பல வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார்.

ஹர்ஷத் மேத்தாவின் இக்குற்றச்சாட்டை பிரதமர் நரசிம்மராவும், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் மறுத்திருக்கலாம், காங்கிரஸ்கட்சி ஏகமனதாக பிரதமர் நரசிம்மராவ்மீது நம்பிக்கை தெரிவித்து தீர்மானமும் நிறைவேற்றியிருக்கலாம், ஆனால், ஹர்ஷத் மேத்தா போன்ற மோசடிப் பேர்வழிகள் இந்திய அரசியலுடன் கொண்டுள்ள நெருக்கமான உறவுகளை எவரும் மறுத்துவிட முடியாது.

ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பி. கொம். பட்டதாரியான ஹர்ஷத் மேத்தா ஒரு தசாப்த காலத்திக்குள் 100 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட சொத்திற்கு அதிபதியாக, குபேர வாழ்க்கையை அடைய முடிந்தமையும், சுமார் 5000 கோடி ரூபா மோசடியில் ஈடுபட முடிந்தமைக்கும் காரணம் அவர்களுக்கு அரசியல்வாதிகளிடமும், அதிகாரிகளிடமும் கிடைத்த ஆதரவும், ஒத்துழைப்பும்தான். இதற்கு பிரதியுபகாரமாக இவர்களிடம் இருந்து அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் கிடைத்தவை பணமும், பொருளும், சுகபோகமும் ஆகும். இவ்வாறான பரஸ்பர பரிமாறல் இன்றி ஹர்ஷத் மேத்தாவும் உருவாகி இருக்க முடியாது. அரசியல் வாதிகளும், அதிகாரிகளும் பணம் படைத்தவர்களாக மாறியிருக்கவும் முடியாது.

ஆனால், இந்திய அரசியலில் இவ்வாறாக

## யுத்தம் முடிவுக்குவர எதிரணி உதவவேண்டும்

(கொழும்பு)

நாட்டின் வருமானத்தின் பெரும்பகுதி ''பயங்கரவாதத்தை'' ஒடுக்கவே பயன்படுவதால் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அரசியல் லாபங்களைப் புறந்தள்ளிவிட்டு எதிர்க்கட்சிகள் முன்வரவேண்டும் என மின்சக்தி, எரிபொருள் துறை அமைச்சர் சந்திரா பண்டார நேற்று பாராளுமன்றத்தில் அவசரகாலச்சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்

அரசு இப்பிரச்சினையை எப்படித் தீர்க்கப்போகின்றது என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் கே. பி. ரட்ணாயக்கா குறிப்பிட்டார்.

## மலையகம் தொடர்பாகவே ஜனாதிபதியை சந்தித்தேன்

### காமினி திசநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தால் இது மக்கள் அபிலாஷைகளுக்கு ஏற்பட்ட பெரிய தாக்கம் எனப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி. யூ. ஜெயரட்ண சந்தேசியவுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் என்ற முறையில் திரு. காமினி திசாநாயக்காவிடம் கேட்டபோது அவர்தான் எந்த ஒரு காலகட்டத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையப் போவதில்லை என்றார்.

நாம் தனியே வேறு ஒரு கட்சியாகச் செயல்படுவோம். நான் ஜனாதிபதியுடன் இரண்டு தடவைகள் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளேன். மலைநாட்டிலுள்ள சாதாரண பிரச்சினை தொடர்பாகவே அவருடன் பேசியதாகக் காமினி தெரிவித்தார்.

## குடும்ப அட்டை.....

பந்தமான விடயங்களை அனுமதி பெற்ற கிராமசேவகர்களும் எழுத உரித்துள்ளவர்களாவர்.

சுய எண்ணப்படி குடும்பப் பதிவு அட்டையில் எழுதப்படுவதோ, பிழையான தகவல்களை பதிந்து வைத்திருத்தலோ, ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பப் பதிவு அட்டைகளை வைத்திருத்தலோ மோசடிகளாகக் கருதப்படும்.

### குடும்பப்பதிவு அட்டை சம்பந்தமான சில அறிவுறுத்தல்கள்:

1. இதுவரை குடும்பப்பதிவு அட்டை பதியத் தவறியவர்கள் உடனடியாகத் தமது கிராமசேவகரை தொடர்பு கொண்டு இதுவரை பெற்றுக் கொள்ளாததற்கான காரணத்துடன் அட்டையில் பதியப்பட வேண்டிய சகல விடயங்களையும் எழுதி கிராமசேவகருடாக குடும்ப அட்டைப்பகுதிக்கு அனுப்பி வைத்தால் புதிய அட்டை கிராமசேவகர் மூலம் வழங்கப்படும்.

குறிப்பு: புதிதாக வடபகுதிக்குள் வந்த குடும்பங்கள் அல்லது தனிநபர்களாயின் உரிய விபரங்களுடன் வடபகுதிக்குள் நுழைவோருக்கான அட்டையினையும் சேர்த்து விண்ணப்பிக்க வேண்டும்.

2. அ. ஒரு குடும்பம், குடும்பப்பதிவு அட்டையில் பதியப் படும்போது மணமாகாத உறு

...வும்விண்ணப்பிக்கலாம்.

4. குடும்பப் பதிவு அட்டை இடமாற்றம் செய்யப்பட முடியாதது ஆகும். குடும்பங்கள் இடமாற்றத்தினால் கிராம சேவகருடாக விண்ணப்பித்தால் தற்காலிக மூகவரியில் மாற்றத்தைப் பதிய அனுமதி வழங்கப்படும். நிரந்தரமாக ஆறுமாதங்களுக்கு மேல் அம்முகவரியில் வசித்தால் மட்டுமே புதிய அட்டை அவ்விடத்து நிரந்தர முகவரியுடன் வழங்கப்படும்.

5. குடும்பமாக அன்றி தனியாக யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்கள், உயர் வகுப்பு மாணவர்கள், தொழில் நிமித்தம் தங்கியுள்ளவர்கள், பாதிரிமார்கள், கன்னியாஸ்திரிகள் ஆகியோர் தனிநபர் அட்டை பதிந்திருத்தல் வேண்டும். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினூடாகவும் ஏனையோர் உத்தியோகபூர்வ கடிதத்துடன் கிராமசேவகர் ஊடாகவும் விண்ணப்பிக்க வேண்டும்.

6. யாழ்.மாவட்டத்தில்வசிக்கும், யாழ். மாவட்டம் தவிர்ந்த பிற மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களாயின் தங்கியுள்ளபகுதி கிராமசேவகருடாக குடும்பப் பதிவு அட்டைக்குரிய முழு விபரங்களையும் அனுப்பி வைத்தால் அவ் விபரங்கள் குடும்ப அட்டைப் பகுதியால் சரிபார்க்கப்பட்டு

## பாராளுமன்றக் குழு ராவை விசாரிக்கும்?

பம்பாய் பங்குசந்தை ஊழல் குறித்து விசாரணை செய்ய முன்னர் மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு இந்தியப்பிரதமர் நரசிம்மராவையும் விசாரணை செய்யலாம் எனக் கூறப்படுகிறது. இது குறித்து குழு அங்கத்தவர்கள் திங்களன்றுமுடிவு செய்வர்

பங்குசந்தை ஊழலில் பிரதான குற்றவாளியான பங்குத்தரகர் ஹர்சத் மேத்தா இந்த விவகாரத்தில் பிரதமர் நரசிம்மராவையும் தொடர்பு படுத்தியதையடுத்தே பிரதமரும் விசாரணைக்கு பாராளுமன்றக் குழுவினால்அழைக்கப்படலாம் எனக்கூறப்படுகின்றது. இதேசமயம் நரசிம்மராவை பாராளுமன்றக் குழுவின்முன் அழைத்து விசாரிக்க வேண்டும் என குழுவிலுள்ள சில உறுப்பினர்கள் கோரியுள்ளதாக இக்குழுவின் தலைவர் ராம்நிவாஸ் மிர்தா தெரிவித்தார்.

இதனிடையே ஹர்சத்மேத்தா தாம் பிரதமருக்கு ஒரு கோடி ரூபா வழங்கியது குறித்து மத்திய புலனாய்வுத்துறை விசாரிக்கவேண்டும் என்று கோரியுள்ளார். இவரது வழக்கறிஞரான ராம்ஜெத்மலானி மத்திய புலனாய்வுத்துறை இயக்குனருக்கு எழுதியகடிதம் ஒன்றில் இது தொடர்பான ஆவணங்களை மத்திய புலனாய்வுத்துறை தனதுபொறுப்பில் எடுத்துக்கொண்டு விசாரணை நடத்தவேண்டும் எனக் கேட்டுள்ளார்.

## புஷ்ஷை கொல்ல என்னை பக்தாத் அனுப்பியது

### குவைத் நீதிமன்றில் ஈராக்கியர்

(குவைத்)

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ்ஷை கார்க்குண்டு மூலம் கொலை செய்யுமாறு ஈராக் புலனாய்வாளர்கள் தம்மை குவைத்திற்கு அனுப்பியதாக ஈராக்கியர் ஒருவர் குவைத் நீதிமன்றில் கூறினார். வாலி அப்தெல் ஹாடி அல்காஸ்ஸாலி (36 வயது) என்ற பெயருடைய இவர் தமக்கு 5000 ஈராக் பணம் இப்பணிக்காக வழங்கப்பட்டதாகவும் கூறினார்.

தம்மை ஈராக்கிய புலனாய்வு அதிகாரி ஒருவர் வேலைக்கு அமர்த்தியதாகவும் ''உம்மை புஷ்ஷை கொலை செய்யநியமித்திருக்கிறோம்'' என்றே தமக்கு உத்தரவிடப்பட்டதாக அவர் மேலும் ஒப்புக்கொண்டார். 14சந்தேக நபர்கள் இக்கொலை முயற்சி தொடர்பாக விசாரிக்கப்படுகின்றனர் புஷ்மீதான கொலைச்சதி நிரூபிக்கப்பட்டால் ஈராக் மீது அமெரிக்கா எவ்விதத்திலாவது எதிர் நடவடிக்கை எடுக்கும் என அமெரிக்கா கூறியுள்ளது.

எமிரேட்சுக்கு புஷ் விஜயம் செய்தபோது ஏப்ரல் 14க்கும் 16க்கும் இடைப்பட்ட காலத்தில் புஷ்ஷை கொல்ல ஈராக்கியர் திட்டமிட்டிருந்தனராம் மற்றொரு குற்றவாளியான ராட் அல் அஸ்ஸாடிக்கு ஈராக்கிய நிபுணர்கள் விரிவான வெடிமருந்து பயிற்சியை வழங்கினர்

...எத்தனிக்குமாறு தமக்கு எப்போதும் உத்தரவிடப்படவில்லை என அஸ்ஸாடி கூறினார். புஷ்ஷை கொல்ல எந்தவொரு முயற்சியையும் தாம் மேற்கொள்ள வில்லை என மற்றைய12சந்தேக நபர்களும் நீதிபதிக்கு கூறினர்.

இதேசமயம் இம்முயற்சியில் தமக்கு சம்பந்தமில்லை என ஈராக் கூறியுள்ளது. வெடிமருந்துகளை விட புஷ் பெறுமதியானவர் அல்ல என ஈராக் குறிப்பிட்டுள்ளது.

தமிழரை

பவர்களின் உயிர்களுக்கும் கூட ஆபத்து ஏற்படக்கூடிய நிலையே அங்கு காணப்படுகிறது.'' இவ்வாறு விடுதலைப் புலிகளால் யுத்தக்கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜயதிலக என்ற பொலிஸாரைப் பார்வையிட இங்குவந்துள்ள அவரது சகோதரரான மாகெலகமுவ விகாரையைச் சேர்ந்த பௌத்த பிக்கு எமது நிருபருக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 'தெற்கில் ஆளும்கட்சியினரும் எதிர்க்கட்சினரும் மேடைப் பேச்சுகளை மட்டுமே நடத்துகின்றனர். மேடையிலிருந்து இறங்கினால் அதுபற்றிஎதுவுமே செய்வதில்லை. நாம் பலத்த சிரமங்களின் மத்தியிலும் கொழும்பு சென்று எமது சகோதரர்களின் விடுதலை தொடர்பாக அரசியல் வாதிகளைச் சந்திக்க முற்பட்டால் அவர்களது கதவுகள் மூடப்படுகின்றன.

அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்கள் அரசியல் பின்னணியில் இயங்குவதால் அவர்கள் இதயசுத்தியுடன் எமது பிரச்

கிறார்கள் இல்லை. இதனால் எமது சகோதரர்களின் விடுதலை தொடர்பாக எதுவித நடவடிக்கைகளையும் எடுக்க முடியவில்லை. இங்கு புறப்படுவதற்கு முன்பாக மல்வத்த அஸ்கிரிய பீடங்களோடு தொடர்பு கொண்ட போதும் உரிய வரவேற்பு கிடைக்கவில்லை.

தமிழ் மக்களாகிய உங்களுக்காகச் செயல்படவோ, வழி நடத்தவோ விடுதலைப் புலிகள்உள்ளனர். ஆனால் ஏழைச் சிங்கள மக்களுக்காக செயல்பட தெற்கில் எவரும் இல்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்

தமிழ் மக்கள் இதுவரை இழந்த இழப்புகளுக்குச் சமமான இழப்புகளைத் தாங்கும் சக்தி சிங்களமக்களுக்குஇல்லை என்பதை வெளிப்படையாகவே கூறவிரும்புகிறேன்.

பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தென்பகுதிமுகாம்களில் சிறை வைக்கப்பட்டுள்ளதை ஒப்புக் கொள்கிறோம். எம்மைப் போலவே தமிழ்ப் பெற்றோர்களும் கவலையடைவார்

பேர்வழிகள் இந்திய அரசியலுடன் கொண்டுள்ள நெருக்கமான உறவுகளை எவரும் மறுத்துவிட முடியாது.

ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பி.கொம். பட்டதாரியான ஹர்ஷத் மேத்தா ஒரு தசாப்த காலத்திக்குள் 100 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட சொத்திற்கு அதிபதியாக, குபேர வாழ்க்கையை அடைய முடிந்தமையும், சுமார் 5000 கோடி ரூபா மோசடியில் ஈடுபட முடிந்தமைக்கும் காரணம் அவர்களுக்கு அரசியல்வாதிகளிடமும், அதிகாரிகளிடமும் கிடைத்த ஆதரவும், ஒத்துழைப்பும்தான். இதற்கு பிரதியுபகாரமாக இவர்களிடம் இருந்து அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் கிடைத்தவை பணமும், பொருளும், சுகபோகமும் ஆகும். இவ்வாறான பரஸ்பர பரிமாறல் இன்றி ஹர்ஷத் மேத்தாவும் உருவாகி இருக்க முடியாது. அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் பணம் படைத்தவர்களாக மாறியிருக்கவும் முடியாது.

ஆனால், இந்திய அரசியலில் இவ்வாறாக ஒரு ஹர்ஷத் மேத்தா மட்டும்தான் உண்டென்பதல்ல. கடந்த காலத்திலும் பலர் இருந்தனர். தற்பொழுதும் இருக்கின்றனர். இந்த வரிசையிலேயே முன்னாள் கடத்தல்மன்னனான மஸ்தான்-இந்திரா காந்தி காலம் - தற்பொழுது இப்ராகிம் தாவூத்-300 பேர் மரணத்திற்கு காரணமான பம்பாய் குண்டுவெடிப்பின் சூத்திரதாரி - போன்றவர்கள் அடங்குகின்றனர். இவர்கள் இந்திய அரசியலையும் ஏன் ஒருவகையில் பொருளாதாரத்தையும் தீர்மானிக்கும் சக்தியாகவும் உள்ளனர்.

கைகோர்த்து வளரும் இவ்விரு சக்திகளும், அதாவது அரசியல்வாதிகளும் நிழல் உலக இராஜாக்களும் ஒருவர் பலத்தை ஒருவர் மீது காட்ட முற்படும்போதுதான் முரண்பாடுகளும் காட்டிக் கொடுப்புக்களும் இடம்பெறுகின்றன.

ஆயிரக்கணக்கான கோடி ரூபாக்களைப் பரிமாற்றம் செய்யும்போது அரசாங்கம் கண்டுகொள்ளாதவரை அமைதியாக இருந்த ஹர்ஷத்மேத்தா அரசாங்கம் பிடியை இறுக்கியபோது தனக்கு உடந்தையாக இருந்த அரசியல்வாதிகளைக் காட்டிக் கொடுக்கத் தயங்கவில்லை. இதே போன்றே மஸ்தான்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டபோது இந்திரா காந்தியுடனும், காங்கிரசுடனும் தனக்கிருந்த உறவு என ஒரு பெரிய பட்டியலை மஸ்தான் வெளியிட்டார். இதேபோல் இப்ராகிம் தாவூத் மீதான நடவடிக்கை பம்பாய் திரையுலகையே ஸ்தம்பிக்கச் செய்துள்ளது.

அதாவது, இந்திய அரசியல்வாதிகளை ஒரு சக்தியாக உருவாக்குவதில் பெரும் பங்காற்றும் மோசடிக்காரர்களும், நிழல் உலக ராஜாக்களும் அவர்கள் தமக்கு எதிரியாக மாறும்போது அவர்களைக் காட்டிக் கொடுத்து விடத் தயாராகின்றார்கள். ஆனால், அதிகாரப் போட்டியும், சூழ்ச்சிகளும் நிறைந்த இந்திய அரசியலில் மோசடிக்காரர்களினதும், நிழல் உலக ராஜாக்களினதும் பணமும், உறவும் பின்னிப் பிணைந்தவையாகி விட்டன. இந்நிலையில், இந்திய அரசியல்வாதிகளை ஆக்குபவர்களும் அவர்களே, அழிப்பவர்களும் அவர்களே எனக் கூறுவதும் ஒருவகையில் பொருத்தமானதே. 1977இல் இந்திராகாந்தியின் தலைமையிலான காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்தமைக்கு இந் நிழல் ராஜாக்களின் பங்கும் கணிசமானது என்பதை எவரும் மறுப்பதில்லை.

### அறிவுறுத்தல்கள்:

1. இதுவரை குடும்பப்பதிவு அட்டை பதியத் தவறியவர்கள் உடனடியாகத் தமது கிராமசேவகரை தொடர்பு கொண்டு இதுவரை பெற்றுக் கொள்ளாததற்கான காரணத்துடன் அட்டையில் பதியப்பட வேண்டிய சகல விடயங்களையும் எழுதி கிராமசேவகருடாக குடும்ப அட்டைப்பகுதிக்கு அனுப்பி வைத்தால் புதிய அட்டை கிராமசேவகர் மூலம் வழங்கப்படும்.

குறிப்பு: புதிதாக வடபகுதிக்குள் வந்த குடும்பங்கள் அல்லது தனிநபர்களாயின் உரிய விபரங்களுடன் வடபகுதிக்குள் நுழைவோருக்கான அட்டையினையும் சேர்த்து விண்ணப்பிக்க வேண்டும்.

2. அ. ஒரு குடும்பம், குடும்பப்பதிவு அட்டையில் பதியப்படும்போது மணமாகாத உறுப்பினர் அனைவரும் பதியப்பட வேண்டும். ஏதேனும் காரணங்களால் வடபகுதிக்கு வெளியே வசிக்கும் குடும்ப உறுப்பினர் பதியப்படாமல் விடுபட்டு இருப்பின் அவ்வுறுப்பினரின்பெயர், பிறந்தஆண்டு, உறவுமுறை, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொழில், தொழில் இடம் ஆகியவற்றை எழுதி குடும்பப் பதிவட்டையுடன் கிராமசேவகர் ஊடாக அனுப்பி வைத்தால், குடும்ப அடடை பகுதியினரால் அவ்உறுப்பினரும் சேர்க்கப்பட்டு குடும்பப்பதிவு அட்டை மீள வழங்கப்படும்.

ஆ. புதியபிறப்புக்கள், இறப்பு, விபரம் சேகரித்தல், திருத்தம் செய்தல் போன்ற காரணங்களுக்கு குடும்பப் பதிவு அட்டையுடன் மாற்றம் சம்பந்தமான விபரத்தை கிராமசேவகர் மூலம் அனுப்பி வைத்தால் குறிப்பிட்ட மாற்றங்கள் பதிந்து தரப்படும்.

3. திருமணமான புதிய குடும்பத்தினர் தமக்கான குடும்பப் பதிவு அட்டை பெறுவதற்கு கவனத்திற் கொள்ளவேண்டியவை:

1. மணமகனின்பெற்றோரின் குடும்பப்பதிவு அட்டையையும்
2. மணமகளின் பெற்றோரின் குடும்பப்பதிவு அட்டையையும்
3. திருமண அத்தாட்சிச் சான்றிதழையும்,
4. இருபகுதியினரின் குடும்பப் பதிவு அட்டைகளிலும் தத்தமது பெயர்களை நீக்கி புதிய அட்டைபெற விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தையும்
5. இருபகுதி கிராமசேவகரினதும் உறுதிப்படுத்தலையும் ஒன்றாக இணைத்து புதிய குடும்பம் வசிக்க இருக்கும் கிராமசேவகர்ஊடாகஅனுப்பி வைக்கப்படின் குடும்ப அட்டைப்பகுதியால் புதியஅட்டை வழங்கப்படும்.

குறிப்பு: பெற்றோரின் கிராம சேவகர் பிரிவு தவிர்ந்த வேறு கிராமசேவகர் பிரிவினூடாக

யாக யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்கள், உயர் வகுப்பு மாணவர்கள், தொழில் நிமித்தம் தங்கியுள்ளவர்கள், பாதிரிமார்கள், கன்னியாஸ்திரிகள் ஆகியோர் தனி நபர் அட்டை பதிந்திருத்தல் வேண்டும். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினூடாகவும் ஏனையோர் உத்தியோகபூர்வ கடிதத்துடன் கிராமசேவகர் ஊடாகவும் விண்ணப்பிக்க வேண்டும்.

6. யாழ்.மாவட்டத்தில்வசிக்கும், யாழ். மாவட்டம் தவிர்ந்த பிற மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களாயின் தங்கியுள்ளபகுதி கிராமசேவகருடாக குடும்பப் பதிவு அட்டைக்குரிய முழு விபரங்களையும் அனுப்பி வைத்தால் அவ்விபரங்கள் குடும்ப அட்டைப் பகுதியால் சரிபார்க்கப்பட்டு அவர்களிற்கான குடும்பப் பதிவு அட்டை வழங்கப்படும்.

7. வடபகுதிக்கு வெளியே செல்லும்போது குடும்பப் பதிவு அட்டையை அவசர அனுமதி வழங்கும் காரியாலயங்களில் ஒப்படைப்பவர்கள் மீண்டும் வந்ததும் அதே காரியாலயத்திற்குச் சென்று குடும்பப் பதிவு அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம்.

வேலைக்கு அமர்த்தியதாகவும் ''உம்மை புஷ்ஷை கொலை செய்யநியமித்திருக்கிறோம்'' என்றே தமக்கு உத்தரவிடப்பட்டதாக அவர் மேலும் ஒப்புக்கொண்டார். 14சந்தேக நபர்கள் இக்கொலை முயற்சி தொடர்பாக விசாரிக்கப்படுகின்றனர் புஷ்மீதான கொலைச்சதி நிருபிக்கப்பட்டால் ஈராக் மீது அமெரிக்கா எவ்விதத்திலாவது எதிர் நடவடிக்கை எடுக்கும் என அமெரிக்கா கூறியுள்ளது.

எமிரேட்சுக்கு புஷ் விஜயம் செய்தபோது ஏப்ரல் 14க்கும் 16க்கும் இடைப்பட்ட காலத்தில் புஷ்ஷை கொல்ல ஈராக்கியர் திட்டமிட்டிருந்தனராம் மற்றொரு குற்றவாளியான ராட் அல் அஸ்ஸாடிக்கு ஈராக்கிய நிபுணர்கள் விரிவான வெடிமருந்து பயிற்சியை வழங்கினர் புஷ்ஷை கொல்ல

பார்வையிட இங்குவந்துள்ள அவரது சகோதரரான மாகெலகமுவ விகாரையைச் சேர்ந்த பௌத்த பிக்கு எமது நிருபருக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும்தெரிவிக்கையில், 'தெற்கில் ஆளும்கட்சியினரும் எதிர்க்கட்சினரும் மேடைப் பேச்சுகளை மட்டுமே நடத்துகின்றனர். மேடையிலிருந்து இறங்கினால் அதுபற்றிஎதுவுமே செய்வதில்லை. நாம் பலத்த சிரமங்களின் மத்தியிலும் கொழும்பு சென்று எமது சகோதரர்களின் விடுதலை தொடர்பாக அரசியல் வாதிகளைச் சந்திக்க முற்பட்டால் அவர்களது கதவுகள் மூடப்படுகின்றன.

அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்கள் அரசியல் பின்னணியில் இயங்குவதால் அவர்கள் இதயசுத்தியுடன் எமது பிரச்சினைகளைத் தீர்க்க முன் வரு

வில்லை.

தமிழ் மக்களாகிய உங்களுக்காகச் செயல்படவோ, வழிநடத்தவோ விடுதலைப் புலிகள்உள்ளனர். ஆனால் ஏழைச் சிங்கள மக்களுக்காக செயல்பட தெற்கில் எவரும் இல்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்

தமிழ் மக்கள் இதுவரை இழந்த இழப்புகளுக்குச் சமமான இழப்புகளைத் தாங்கும் சக்தி சிங்களமக்களுக்குஇல்லை என்பதை வெளிப்படையாகவே கூறவிரும்புகிறேன்.

பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தென்பகுதிமுகாம்களில் சிறைவைக்கப்பட்டுள்ளதை ஒப்புக்கொள்கிறோம். எம்மைப் போலவே தமிழ்ப் பெற்றோர்களும் கவலையடைவார்கள் என்பதை உணருகிறேன்.

இதுஓர் அரசியல்பிரச்சினை. பொதுமக்களாகிய நாம் இது தொடர்பாக எதையும்செய்ய முடியாது. சிங்கள - தமிழ் மக்களாகிய நாம் ஒன்றிணைவதன் மூலமே இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என எண்ணுகிறேன்.

இங்குள்ள உண்மை நிலை எமக்குத் தெரியாது. இராணுவம் தரைமார்க்கமாக ரோந்து செல்வதாக நினைத்தேன். ஆனால் இங்கு நிலைகளிலிருந்து இராணுவம் வெளியேறமுடியாதநிலைஇருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது

இங்கு இவ்வாறான நிலை இருப்பது இங்கு வந்தபின்தான் தெரிகிறது. ஏனைய பகுதிகளுடன் யாழ்ப்பாணத்திற்கு தொடர்பு இருப்பதாக நினைத்தேன். ஆனால் இப்பொழுதுதான் நீங்கள் எவ்வளவு சிரமத்தை எதிர்கொள்கிறீர்கள் என தெரிகிறது'' என்றார். (நி) (ச)

### ஐரோப்பாவில்

கிய பேட்டியில் தெரிவித்தார்.

மேலும் திரு. ரணில் விக்கிரசிங்கா தெரிவிக்கையில்;

அண்மையில்நடந்தமாகாண சபைத் தேர்தல் முடிவுகள் பற்றிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் நகர்ப்புற வாக்காளர்களிடையே விலைவாசி உயர்வுதொடர்பாக சிறிதளவு அதிருப்தி தோன்றியிருப்பதாக்க குறிப்பிட்டார்.

கொழும்பில் தமிழர்கள் கைதாவது பற்றிய கேள்விக்கு பதிலளித்த அவர் கூறுகையில் பொலிசார் நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேற்கொள்ளும் வழமையான நடவடிக்கையே இது என்றும், இது தொடர்பாக கொழும்பிலுள்ள தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கும், பாதுகாப்பு அதிகாரிகளுக்குமிடையே இது தொடர்பாக உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் விடுதலைப் புலிகளால் ஆபத்து ஏற்படும் நிலைமையிலேயே தலைநகரில் உள்ளது. ஆனால் அப்பாவித் தமிழர்கள் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

### துயர்

தித்துறை கடற்கரையை வெறித்துப் பார்த்தவண்ணம் இருந்தனர்.

காலை 7-30 மணியளவில் துறைமுக இறங்கு துறையில் தரித்துநின்ற இழுவைப் படகு ஒன்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இரு அதிகாரிகளுடனும் சில துறைமுகத் தொழிலாளர்களுடனும் கைதிகளின் உறவினர்கள் வந்தடைந்த கப்பலை நோக்கிச் சென்றது. இவ் இழுவைப் படகில் கைதிகளின் உறவினர்களும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொழும்பு அலுவலகப் பிரதிநிதி ஒருவரும், சில உதவியாளர்களும் ஏறிக்கொண்டனர்.

இழுவைப்படகு மீண்டும் இறங்குதுறையை வந்தடையும்போது நேரம் காலை 8-20 மணியாகியது. பின்னர் இழுவைப்படகில் இருந்து ஒவ்வொருவராக தரையிறங்கினர்.

சிங்கள யுத்தக் கைதிகளின் உறவினர்கள் வந்த கப்பலைப் பருத்தித்துறைக் கடற்பரப்பில் கண்ட பொதுமக்கள் பருத்தித்துறை இறங்குதுறையில் பெருமளவு திரண்டனர்.

மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்துவதிலும், ஒழுங்குபடுத்துவதிலும் தமிழீழக் காவல் துறையினர் ஈடுபட்டிருந்தனர். அதைவிட தரையிறங்கிய சிங்களக் கைதிகளின் உறவினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக சீருடை தரித்தவிடுதலைப் புலிகளின் ஆயுதம் தாங்கிய வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

தரையிறங்கும் கைதிகளின் உறவினர்களைவிடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி உட்பட விடுதலைப் புலிகளின் பல பிரதிநிதிகள் வரவேற்றனர்.

இறங்குதுறைப் பகுதியில் யுத்தக் கைதிகளின் உறவினர்கள் சிறிது நேரம் தங்க வைக்கப்பட்டு குளிர்பானங்களும், தேநீரும் வழங்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி கைதிகளின் உறவினர்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார். மேலும் யுத்தக்கைதிகளின் உறவினர்கள் சார்பாக யுத்தக்கைதி சிசில் சந்தலால் என்பவரின் தந்தையான கேகாலையைச் சேர்ந்த திரு. அல்பேட் பெனாண்டோ விடுதலைப்புலிகளுக்கு நன்றிதெரிவித்து உரையாற்றினார்.

கைதிகளின் உறவினர் குழுவில் இளம் பெண்கள், இளைஞர்கள், மூதாட்டிகள், வயோதிபர்கள், மாணவர்கள், நடுத்தர வயதுடையோர், பௌத்த பிக்கு என்று பல்வேறு வகைப்பட்ட தரத்தினர் காணப்பட்டனர். இவர்கள் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுக்கு வணக்கம் தெரிவித்ததுடன் அவர்களுடன் சிறிது நேரம் உரையாடினர். இவ் உரையாடலின் போது கைதிகளின் உறவினர்கள் பலர் கண்ணீர் சிந்தி அழுவதைக் காணக்கூடியதாக இருந்த .

இவ்வரவேற்புவைபவத்தைத் தொடர்ந்து செஞ்சிலுவை பொறிக்கப்பட்ட இரண்டுமினிபஸ்களில் இக்கைதிகளின் உறவினர்கள் ஏறிக்கொண்டனர். விடுதலைப் புலிகளின் வீரர்கள் கைதிகளின் உறவினர்களின் பாதுகாப்பிற்காக நவீன ஆயுதங்கள் சகிதம் வாகனம் ஒன்றில் முன்னோக்கிச் செல்ல, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் இவர்களை யாழ். நகரப்பகுதியை நோக்கி அழைத்துச் சென்ற போது நேரம் காலை 10-00 மணியைநெருங்கியது. அவ்விடத்தை விட்டு அகலும்போது கூடிநின்ற மக்கள்கூட்டத்தைநோக்கிவருகை தந்திருந்த உறவினர்கள் கையசைத்த வண்ணம் சென்றனர்.

### உங்கள்

நாங்கள் நல்லெண்ண அடிப்படையில் உங்கள் பிள்ளைகளை-உங்கள் உறவினர்களை விடுதலை செய்வோம்''.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொலிசாரினதும் இராணுவத்தினரினதும் உறவினர்களை வரவேற்று உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில், ''இந்த நிமிடத்தில் இருந்து நீங்கள் திரும்பிச் செல்லும் வரை உங்கள் பாதுகாப்பிற்கும் சகலவிடயங்களுக்கும் நாங்கள் பொறுப்பு என்பதை உறுதிப்படுத்துகிறோம். இன்னும்சிறிதுநேரத்தில் உங்கள்பிள்ளைகளை-உங்கள் உறவினர்களை சந்திக்'' வழியமைத்து தருவோம்க என்றார். (நி)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு
24-08-1972

★ ★ ★

வீரச்சாவு
19-06-1990

### லெப். பூபதி

குமாரசிங்கம் குமாரசங்கர்
(கந்தளாய் திருமலை)

ஒரு தாய் பெற்றெடுத்த ஒலமன்று
பல தாய்க்கு உரியவனாய் பாரினிலே இன்று
குமாரசங்கர் என்ற பெயருடன்,
திருமலை தந்த கந்தளாய் நகர் பள்ளியிலே அன்று

பார்போற்றும் அண்ணன் பாசறைப் பள்ளியிலே
பூபதி என்ற பெயருடன் சென்று நீ
யாழ் நகர் கோட்டையிலே இரத்தத்தை நீராக்கி
விடுதலைப் பயிருக்கு வித்திட்ட வேங்கை நீ.

மானிலம் போற்றும் மா வீரனாய் நீ
பாரினிலே மடியும்போதும் பாதகர் காலில் வீழாது.
பூபதி என்ற பெயரை
புனிதமாக்கி நீ சென்றாய்.

பூபதி என்ற பெயருக்கு வித்திட்டு நீ விழுந்தாய்,
விழுந்த வித்தினிலே விடுதலை என்ற பெயருடனே
விடுதலை காண நீ சென்ற வழியினிலே
வேர்விட்டு வளருதப்பா

உன் நாமம் இந்நாளிலே
மூன்றாண்டு சென்றும் ஆறாத துயரப்பா

இன்று எமதில்லத்தில் நடைபெறும் மதிய விருந்தில் போராளிகள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

7B கலட்டி வளவு ஒழுங்கை,
பருத்தித்துறை.
(5177)

குடும்பத்தினர்.
நண்பர்கள்.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

19-6-90 அன்று யாழ் கோட்டை இராணுவ முகாமை கைப்பற்றும் முயற்சியில் வீரச்சாவெய்திய



கப்டன்
### சேரன்
(கந்தையா சேனாதிராசா)
ஒதியமலை, மணலாறு.

## ஒரு தொகுதி உணவுடன் குமணநேற்றுவந்துசேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு ''குமண'' என்ற கப்பல் நேற்றுநண்பகல் 11.50 அளவில் பருத்தித்துறை துறை முகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் 863 மெற்றிக் தொன் அரிசி, 115 மெற்றிக் தொன் பருப்பு. 409 மெற்றிக் தொன் சீனி, 320 மெற்றிக் தொன் உரம், 1716 கல்வித் திணைக்களத்திற்குரிய தளபாடங்கள், மற்றும் கொப்பிவகைகள், யாழ் வைத்தியசாலைக்கும் தனியாருக்குமான மருந்து வகைகள். ஒக்சிசன் சிலிண்டர், எக்ஸ்றே பிலிம் ஆகியனவும், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கான சுமார் 12 5 மெற்றிக் தொன் மருந்துப் பொருள்களும், யாழ். பல்கலைக் கழகத்துக்கான சுமார் 54 மெற்றிக் தொன் பல்வேறு வகைப்பட்ட பொருள்கள் என்பவற்றுடன் 300 தபால்பொதிகளும் எடுத்து வரப்பட்டுள்ளன. (யோ)

## பிரேமதாசா உருகம்பொல கொழும்பு திரும்பினார்

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தினால்தேடப்பட்டவரான முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல நேற்றுமாலை கொழும்பு திரும்பினார். இந்தியாவிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலயத்தை வந்தடைந்த அவரை அவரது சகோதரனும் உறவினர்களும் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

அவர் அங்கு செய்தியாளரிடம் பேசுகையில், விசாரணையை எதிர்நோக்க தான் தயாராக இருப்பதாகவும், விசாரணைகள் நேர்மையாக நடைபெறும் என்று நம்புவதாகவும் தெரிவித்தார்

அரசாங்கத்திற்கு எதிரான சதிச்செயல்களில் ஈடுபட்டதான குற்றச்சாட்டுகளின் நீதிமன்ற விசாரணைகளை எதிர்நோக்கிய அவர் பொலிசாரினால் கைதாவதை தவிர்ப்பதற்காக இவ்வளவு காலமும் சென்னையில் தங்கியிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

## பொதுக்கூட்ட அறிவித்தல்

மாதகல், சம்பில்துறை கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபை தெரிவும் எதிர்வரும் 2 7. 93 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அதிகாரி செல்லமுத்து வீதி, மானிப்பாயில் உள்ள கடற்புலிகள் காரியாலயத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும். அத்துடன் அங்கத்தவர்களின் இழப்புகள், பாதிப்புகள் என்பவற்றை சமர்ப்பிக்கவும்.


செ. டே. திருஞானரத்தினம்
கடற்றொழில் பரிசோதகர்
சண்டிலிப்பாய்.


(5174)

## அச்சுவேலைகள்

★ திருமண அழைப்பிதழ்கள்
★ அந்தியேட்டிக் கல்வெட்டுகள்
★ துண்டுப் பிரசுரங்கள்
★ பில் புத்தகங்கள்
★ கடிதத் தலைப்புகள்
★ நூல்கள்

எவ்வகையான அச்சுவேலைகளுக்கும்
பைண்டிங் வேலைகளுக்கும்





விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் யுத்தக்கைதிகளின் உறவினர்கள் 'பாஜ்' மூலம் பருத்தித்துறை இறங்கு துறையை வந்தடைந்தபோது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம்.

# புலிகளின் பராமரிப்பு மகிழ்ச்சியை தருகிறது

(நமது நிருபர்)

''எனது தம்பியின் இன்றைய நிலை குறித்து நான் கவலையடைகின்றபோதும், இவ்வளவுகாலமாகவிடுதலைப் புலிகள் எனது தம்பியை சிறந்தமுறையில் பராமரித்து வந்தது குறித்து நான் மிகவும் சந்தோசப்படுகிறேன். அரசாங்கம் கூட இவ்வாறு பராமரித்து வைத்திருக்குமா என்பது உண்மை தான் என்றார்.

சாகும்வரை உண்ணாவிரதமிருந்து உயிருக்காக போராடிக் கொண்டிருக்கும் வேளையில் எனது பிள்ளையை பார்க்கக் கிடைத்ததை எண்ணி மிகவும் வேதனையடைகிறேன்.

இவ்வாறு விடுதலைப் புலி

வரதம் இருக்கத் தொடங்கியதை தொடர்ந்து தற்போது அரசு இவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக கூறுகின்றது. ஆனால் இன்றுவரை விடுவிப்பது தொடர்பாக எந்தவிதமான ஓர் உருப்படியான நடவடிக்கைகளையும் எடுத்ததாகத் தெரியவில்லை என விடுதலைப் புலிகளால்

போராளிகள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளு
மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

7B கலட்டி வளவு ஒழுங்கை, பருத்தித்துறை.
குடும்பத்தினர். நண்பர்கள்.

(5177)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

19-6-90 அன்று யாழ் கோட்டை இராணுவ முகாமை கைப்பற்றும் முயற்சியில் வீரச்சாவெய்திய



கப்டன்
**சேரன்**
(கந்தையா சேனாதிராசா)
ஒதியமலை, மணலாறு.

**லெப். நூபதி**
(குமாரசிங்கம் குமாரசங்கர்)
கந்தளாய், திருமலை.

கப்டன்
**அந்தோனி**
(யேக்கப் சத்தியசீலன்)
எமில்நகர், மன்னார்.

தம்பியின் நிழலில் - கூடி
வளர்ந்த வீரமறவர்கள்
பல பரணிகளைப் பாடிய
வீரப் புலிவீரர்கள்
புதிய புறம் படைக்க ஒன்றாகிய
இனிய தோழர்கள்
கோட்டையில் கொடியேற்ற
பாய்ந்தனரே!
கொடியேறுமுன் எம் மனங்களில்
நிறைந்தனரே!

(5183) - நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் இராசையா
[தியாகி லெப். கேணல் திலீபனின் தந்தை]

ஊரெழு மேற்கு ஊரெழுவைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் நா. இராசையா அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலம்சென்ற பருவதவர்த்தினியின் அன்புக் கணவரும், இளங்கோ [கனடா], நம்பி, அசோகன் [கனடா], பார்த்தீபன் [தியாகி லெப். கேணல் திலீபன்] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும்; மகேஸ்வரி, நளாயினி [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும்; செவ்வேள், தமிழினி, வர்ணன், நிலானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று 19-06-93 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று ஊரெழு பொக்கணை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

முகவரி: தியாகி திலீபன் வீதி,
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
இ. நம்பி (மகன்)

(சி-6863)

செ. டே. திருஞானரத்தினம்
கடற்றொழில் பரிசோதகர்
சண்டிலிப்பாய்.

(5174)

## அச்சுவேலைகள்

★ திருமண அழைப்பிதழ்கள்
★ அந்தியேட்டிக் கல்வெட்டுகள்
★ துண்டுப் பிரசுரங்கள்
★ பில் புத்தகங்கள்
★ கடிதத் தலைப்புகள்
★ நூல்கள்

எவ்வகையான அச்சுவேலைகளுக்கும்
பைண்டிங் வேலைகளுக்கும்
நாடவேண்டிய இடம்

**'இராசன் அச்சகம்'**
**144, அருச்சுனா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(5173)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப்பிறப்பு:
1968 — 03 — 22



வீரச்சாவு
1991 — 07 — 11

**வீரவேங்கை இரட்ணா**
(கந்தையா விக்னேஸ்வரன்)

வீரமுயர் தமிழினத்தின் வேங்கையாய்
வந்துதித்தாய் வரணியில் இரட்ணா
தீரமுடன் போராடச் சிந்தை கொண்டு
செருக்களம் சென்றாய் நீயாக
சிங்களக் காடை இராணுவமதனை
கொல்லவென்று சினங்கொண்டாய்
வெங்கனலாய் வீரச்சாவு பெற்றாய்
மங்காது நின்புகழ் தமிழீழமதில்.

இந்நாளில் இவருடன் வீரச்சாவை தழுவிக்கொண்ட போராளிகளையும் நினைவு கூருகின்றோம்.

—குடும்பத்தினர்

வரணி இயற்றாலை,
வரணி.

(5182)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

'பாஜ்' மூலம் பருத்தித்துறை இறங்கு துறையை வந்தடைந்தபோது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம்.

# புலிகளின் பராமரிப்பு மகிழ்ச்சியை தருகிறது

(நமது நிருபர்)

''எனது தமபியின் இன்றைய நிலை குறித்து நான் கவலையடைகின்றபோதும், இவ்வளவுகாலமாகவிடுதலைப் புலிகள் எனது தம்பியை சிறந்தமுறையில் பரா ரித்து வந்தது குறித்து நான் மிகவும் சந்தோசப்படுகிறேன். அரசாங்கம் கூட இவ்வாறு பராமரித்து வைத்திருக்குமா என்பது சந்தேகம் தான்''.

இவ்வாறு விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதியாக தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிசார் ஒருவரின் சகோதரி நேற்று தெரிவித்தார்.

மேலும் தம்பியின் விடுதலை என்பது ஓர் அரசியல் பிரச்சினை என்பதை நான் நன்றாக உணர்கிறேன். நான் ஒருபகுதி மக்களுக்காகச் சொல்லவில்லை. இரு பகுதி மக்களும்கஷ்டமடைகிறார்கள் என்பது உண்மைதான் என்றார்.

சாகும்வரை உண்ணாவிரதமிருந்து உயிருக்காக போராடிக கொண்டிருக்கும் வேளையில் எனது பிள்ளையை பார்க்கக் கிடைத்ததை எண்ணி மிகவும் வேதனையடைகிறேன்.

இவ்வாறு விடுதலைப் புலிகளால் சிறைக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறிலங்கா பொலிசைச் சேர்ந்த கியந்த என்பவரின் தாயார் தெரிவித்தார்.

மேலும் எனது பிள்ளை கைது செய்யப்பட்ட செய்தி ஆறுமாதங்களின் பின்புதான் கிடைத்தது. அதுவும்சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாகத்தான் கிடைத்ததுஎன்றார்.

எமது பிள்ளைகள் தற்போது தம்மை விடுதலை செய்யுமாறு கோரி உண்ணாவரதம் இருக்கத் தொடங்கியதை தொடர்ந்து தற்போது அரசு இவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக கூறுகின்றது. ஆனால் இன்றுவரை விடுவிப்பது தொடர்பாக எந்தவிதமான ஓர் உருப்படியான நடவடிக்கைகளையும் எடுத்ததாகத் தெரியவில்லை என விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள யுத்தக் கைதிகளில் ஒருவரின் தயாரான அகலவத்தையைச் சேர்ந்த ஏ சி. சிசிலியா என்ற வயோதிபமாது தெரிவித்தார்.

''ஆரம்பகாலத்தில் பலமாதங்களுக்கு ஒருதடவை தான் பிள்ளைகளிடம் இருந்து கடிதம் வரும். ஆனால் தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமூடாக ஒழுங்காகக் கடிதங்கள் வருகின்றன என மேலும் அவர் தெரிவித்தார்.

# ஆட்சேர்ப்பதில் ஆர்வம் நலனில் அக்கறையில்லை

(வடமராட்சி)

''எங்களது பிள்ளைகளை மீட்க இந்த அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. மூன்று வருடங்களாகியும் எங்கள் பிள்ளைகள் எங்கேஇருக்கின்றார்கள் என்று கூட தெரிவிக்கத் தவறிவிட்டது''

இவ்வாறு உண்ணாவிரதம் இருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் லெஸ்லி பெரேராவின் தந்தையான எல். டி. ஏ. பேரேரா (மாத்தளை) தனது மகனைப் பார்வையிட நேற்று வந்தபோது பருத்தித்துறை இறங்குதுறையில் வைத்துத் தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில், படைக்கு ஆட்சேர்ப்பதில் காட்டும் ஆர்வம் படையினரின் நலன்களில் இந்த அரசாங்கம் காட்டுவதில்லை. எங்கள் பிள்ளைகள் இறந்துவிட்டார்களென்றே எண்ணியிருந்தோம். பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலமே பிள்ளைகள் இருக்கும் இடத்தை அறிந்துகொள்ள முடிந்தது.

எமது பிள்ளைகள் எங்கே இருக்கின்றார்கள் என்று அறிய அரசாங்கத் தலைவர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளிடம் பலதடவைகள் சென்று கேட்டபோதிலும் அவர்கள் இதுவரை எந்தவித தகவலையும் எமக்கு தரவில்லை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவோ, புதிய ஜனாதிபதி விஜயதுங்காவோ இந்த விடயத்தில் மௌனமாக இருந்து விட்டார்கள்.

யுத்தக் கைதிகளின் விடயத்தில் அரசாங்கம் தென்பகுதியில் காட்டிவரும் இருட்டடிப்பு நிலையால் சிங்கள இளைஞர்கள் மத்தியில் படையில் சேரும் நாட்டம் குறைந்து விட்டது. அரசின்மீது நம்பிக்கை இழந்து விட்டோம் என்றார். (யோ)

## பிள்ளைகளை சந்திக்க உதவியோருக்கு நன்றி

விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ள சிறிலங்கா பொலிஸ் மற்றும் இராணுவ உத்தியோகஸ்தர்களை பார்வையிட எமக்கு தேவையான உதவிகளை வழங்கிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள மக்கள் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என நேற்றுக் காலை ''நரோமா'' கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைந்த, தற்போது சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் சிங்கள பொலிஸாருள் ஒருவரான சிசில் சாந்தலால் என்பவரின் தந்தையான பெர்னான்டோ நன்றி தெரிவித்து மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இலங்கையில் நாலாபக்கங்களிலும் இருந்து வந்த எங்களை உபசரித்த உங்களுக்கு எங்கள் நன்றியை சிங்கள மக்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.